பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

*12 08-2025* *TUESDAY* *6.30 PM*

மாநிலச் செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆந்திரா, ஒடிஷா, பஞ்சாப் மாநிலங்களில் நான்கு செமி கண்டெக்டர் தொழிற்சாலைகளை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. விவசாயிகள் நலனுக்கு மத்திய அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
3. தமிழ் மொழியின் சிறப்புகளை பிரபலப்படுத்துவதில் அகில இந்திய வானொலி சிறப்பாக பங்காற்றி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
4. உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
5. தமிழகத்தில் விவசாயிகள் நலனில் திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<>>>>>

நாட்டில் மேலும் நான்கு செமி கண்டெக்டர் உற்பத்தி தொழிற்சாலைகளை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ஒடிஷா, பஞ்சாப், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 4 ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில் இந்த ஆலைகள் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஏற்கனவே, ஆறு ஆலைகளை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேலும் நான்கு ஆலைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆலைகள் இத்துறையில் சுயசார்பை உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் மின்னணுப்பொருட்கள் உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில் ஆறு மடங்கு அதிகரித்துள்ளதாகவும், ஏற்றுமதி எட்டு மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மொபைல் போன்கள் ஏற்றுமதி 2 லட்சம் கோடி ரூபாயை எட்டியிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

விவசாயிகள் நலனுக்கு மத்திய அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, மாநிலங்களவை உறுப்பினர் திரு Satnam Singh Sandhu-வின் கட்டுரையை அவர் பகிர்ந்துள்ளார்.

பயிர் காப்பீடு, மண்வள அட்டைகள், நேரடி பண பரிமாற்றம், நவீன நீர்பாசனத் திட்டங்கள் போன்றவை விவசாயிகளுக்கு பெரிதும் பயன் அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

அவற்றின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழ் மொழியின் சிறப்புகளையும், தமிழ் கலாச்சாரத்தையும் பிரபலப்படுத்துவதில் அகில இந்திய வானொலி சிறப்பாக பங்காற்றி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில், காணொலி மூலம், ''காலத்தை வென்ற தமிழ் புதையல்கள்'' என்ற புத்தகத்தை வெளியிட்டு அவர் பேசினார்.

தமிழ் இலக்கியங்களின் குறிப்புகள் அடங்கிய உரைகள் வானொலியில் அதிக அளவில் இடம்பெற்றுள்ளதை குறிப்பிட்ட அமைச்சர், சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் இலக்கியவாதிகள் முக்கிய பங்காற்றியதாக கூறினார்.

<<<<<>>>>>

இளநிலை பொறியியல் பட்டப்படிப்பு துணை கலந்தாய்வு மாணவர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப்பதிவுக்கான அவகாசம் வரும் 14-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இன்றுடன் நிறைவடையவிருந்த கால அவகாசம் மாணவர்களின் வசதிக்காக நீட்டிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

1 8 0 0 4 2 5 0 1 1 0 என்ற கட்டணமில்லா தொலைசி எண் மூலம் மாணவர்கள் தங்களது சந்தேகங்களை தெளிவுப்படுத்திக் கொள்ளலாம் என்று திரு கோவி. செழியன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 268 பேர் உடல் உறுப்பு தானம் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதை மத்திய அரசு வழங்கியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் விவசாயிகள் நலனில் திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ஓசூரில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் இடையே இன்று உரையாற்றிய அவர், அஇஅதிமுக ஆட்சியில் ஓசூரில் கொண்டுவரப்பட்ட சர்வதேச மலர்கள் ஏற்றுமதி மையம் தற்போது செயல்படாமல் இருப்பதாக கூறினார்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் அதிக அளவில் மலர்கள் சாகுபடி செய்யப்படும் நிலையில், வாசனை திரவியங்கள் தொழிற்சலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மா விவசாயிகள் பயன்பெறும் வகையில், முறையாக விலை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் இதுவரை ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகள் குறித்து மாநில அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த நான்காண்டுகளில் முதலமைச்சரின் வெளிநாட்டு பயணங்களால் 18 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

*இவற்றின்மூலம் 29 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*ஆனால், அரசு உறுதியளித்தவாறு எதுவும் நடக்கவில்லை என்றும், முதலமைச்சரின் வெளிநாட்டு பயணங்கள் தோல்வியடைந்துள்ளதாகவும் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>*

*தமிழகத்தில ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

## *மாவட்டச் செய்திகள்*

*திண்டுக்கல் மாவட்டம் காமாட்சிபுரத்தில் 37 லட்சம் ரூபாய் மதிப்பீலான வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திரு பெரியசாமி இன்று திறந்துவைத்தார்.*

*-------------------*

*புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பகுதியில் சாலை மேம்பாட்டுப்பணிகளை மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் தொடங்கிவைத்தார்.*

*-----------------*

*மேட்டூர் காவிரி ஆற்றில் 3 லட்சம் மீன் குஞ்சுகளை விடுவிக்கும் நிகழ்ச்சி மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.*

*-----------*

*கள்ளக்குறிச்சி மாவட்டம் தொட்டியம் கிராமத்தில் அரசு திட்டங்கள் தொடர்பான முகாமை ஆட்சியர் திரு பிரசாந்த் தொடங்கிவைத்தார்.*

*----------------*

*விழுப்புரத்தில் சர்வதேச இளையோர் தினத்தையொட்டி, மை பாரத் தளம் மற்றும் காவல்துறை சார்பில் இணையதள மோசடிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.*

*----------------*

*தேசிய நூலகர்கள் தினம் இன்று கொண்டாடப்பட்டதையொட்டி, மயிலாடுதுறையில் நூலக தந்தை எஸ். ஆர் ரங்கநாதன் சிலைக்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

*---------------------*

*ராணிப்பேட்டையில் காவல் கண்காணிப்பாளர் திரு ஐமன் ஜமால் தலைமையில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.*

*---------------------*

*சென்னையில் சுயஉதவிக்குழுக்கள் மூலமாக பணி செய்து வந்த தற்காலிக தூய்மைப்பணியாளர்கள் தனியார் நிறுவனத்தின்கீழ் பணியமர்தப்படுவதன்மூலம் அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் கிடைக்கும் எனவும், அவர்களுக்கான பலன்கள் கிடைப்பது 100 சதவீதம் உறுதி செய்யப்படும் என்றும் மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

*<<<<<<>>>>>*

## *விளையாட்டுச் செய்திகள்*

*சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Arjun Khadhe – Vijay Sundar Prasanth இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*இத்தாலியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை 6-1, 7-6 என்ற செட் கணக்கில், அர்ஜென்டினாவின் Juan Bautista Torres – Gonzalo Villanueva இணையை வென்றது.*

***------------------***

***உலக Speed Chess சாம்பியன் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***<<<<<<END>>>>>>***